
ஓவியம்: ஜே.கே.

# புகுந்த வீடு

துரைං நந்தகுமார்

வந்தவளின் சாமார்த்தியத்தில்
பிரமித்து நிற்கிறேன்
அம்மா சொல்கிறாள்
எதிர்வீட்டு அம்மாவிடம்
முந்தானையில் முகம்துடைத்தபடி
சுவாரசியமாய்
'நடந்ததென்னவென்று
கேளு... ... ... . '
இத்தன வருஷமா
நானும்தான் சமைக்கிறேன்
நீயும்தான் சமைக்கிறாய்
இந்த திட்டமிடல் வந்ததுண்டா?
செய்நேர்த்தியாய் செய்ததுண்டா?
அவனுக்கும் அவளுக்குமாய்
புதியதாய் வந்தவள்
சமைக்கிறாள் மீதமற்று!
மதில்சுவரின் இந்த பக்கத்துக்கும்
அந்த பக்கத்துக்கும்
நடைபெற்றுக்கொண்டிருக்கும்
உரையாடலின் ஊடே
படுக்கையறையில் நுழைந்தவளை
"என்னாச்சி ஒருமாதிரியிருக்க?"
"அதெல்லாம் ஒண்ணுமில்லங்க"
'மறைக்காமல் சொல்லு'
அம்மா ஏதாவது
'சேச்சே! அதெல்லாம் இல்லப்பா'
'பிறகென்ன முகம்வாட்டமா'
அம்மா ஞாபகம் வந்துடுச்சா?
'நான் நல்லாத்தானிருக்கிறேன்'
மெல்ல அமரவைத்து
'பிறகென்ன என்றபோது'
எட்டி வாசலைப்பார்த்து
மெல்லச் சொன்னாள்
ஒருபிடிச்சோறு மீறும்படிதான் சமைப்பேன்
என் வீட்டில்
காத்திருக்கும் நாய்க்கு.
இங்கும் காத்திருக்கு
ஒரு நாய்.